TNTP010028652026

**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்</u>**
**<u>திருச்சிராப்பள்ளி</u>**

முன்னிலை : **திரு.S.கோபிநாதன், பி.எஸ்.சி, பி.எல்.,**
இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி
2026-ம் ஆண்டு ஜுலை திங்கள் 20-ம் நாள் திங்கட்கிழமை

**<u>அமர்வு வழக்கு எண்.222/2026</u>**
**<u>CNR.No. TNTP01-002865-2026</u>**

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | | தமிழ்நாடு அரசுக்காக<br>காவல் ஆய்வாளர்,<br>முசிறி காவல் நிலைய<br>குற்ற எண்.80/2025. |
| குற்றம் சாட்டப்பட்டவரின் பெயர், வயது, தந்தை பெயர் மற்றும் முகவரி | | **<u>எதிரிகளின் பெயர்:</u>**<br>1. வேல்முருகன் த/பெ பழனிசாமி, வயது 39/2025,<br>கொடிக்கால் தெரு, கணேசபுரம் ரோடு,<br>தேவஸ்தானம், பெட்டவாத்தலை,<br>ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.<br>2. கிஷோர் த/பெ தேவராஜ், வயது 28/2025,<br>12- பாரதி நகர், புஞ்சை புகழுர்,<br>கரூர் மாவட்டம். |
| சம்பவ நாள் | | 18.03.2025 |
| புகார் நாள் | | 18.03.2025 |
| எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | | 18.03.2025 |
| எதிரிகளுக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டு பிரிவுகள் | : | எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 275, 123 of BNS Act r/w Section 24(1) of COTPA Act கீழ் குற்றசாட்டுகள் வனையப்பட்டுள்ளது. |
| எதிரிகளின் பதிலுரை | & | குற்றவாளி இல்லை |
| தண்டனை அல்லது உத்தரவு | & | இந்த வழக்கில் சட்டப்பிரிவு 123 |

| | | |
|---|---|---|
| | | BNS ன் கீழ் நிரூபிக்க எந்தவித நிலையான சாட்சியங்கள் எதுவும் இல்லை. ஆனால் இந்த வழக்கில் புகையிலை பொருட்களை கைப்பற்றிய சங்கதி நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த வழக்கில் 1, 2 எதிரிகளுக்கு எதிராக அரசு தரப்பு 6 உ/இ 24(1) COTPA Act ன் கீழ் குற்றத்தை நிரூபித்து விட்டது என முடிவு செய்து எதிரிகளை 258(2) BNSS ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து எதிரிகளுக்கு மேற்படி பிரிவின் கீழ் ரூ.200/- வீதம் அபராதம் விதிக்கப்படுகிறது. எதிரிகள் அபராதம் கட்ட தவறும் பட்சத்தில் பிரிவு 8 BNSS ன் கீழ் ஒரு வாரம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்து உத்தரவிடுகிறன். |
| வழக்கு சொத்திற்கான உத்தரவு | | இவ்வழக்கு இறுதியாக முடிவுற்றுள்ளதாலும், பொருள் சாட்சியாக நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்ட 40 கிலோ ஹான்ஸ் பாக்கெட்டுகள் சட்டப்பூர்வமான எந்தவித பயன்பாட்டிற்கும் உகந்ததாக இல்லாததுடன், அவற்றை மீள ஒப்படைப்பதற்கோ அல்லது பொதுமக்கள் பயன்பாட்டிற்காக விநியோகிப்பதற்கோ தகுதியற்றவையாக இருக்கலாம்.<br>எனவே, பறிமுதல் செய்யப்பட்ட மேற்கண்ட 40 கிலோ ஹான்ஸ் பாக்கெட்டுகள் அரசுக்கு பறிமுதல் செய்யப்பட்டதாகக் கருதப்பட்டு, அவற்றின் பாதுகாப்புப் பொறுப்பில் உள்ள பிரிவு 38(4) Food Safety and Standard Act, 2006 அலுவலரால் சட்டத்தின்படி அழிக்கப்பட வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.<br>மேலும், அவ்வாறு அழிக்கும் நடவடிக்கை பொறுப்புள்ள அலுவலர்/குழுவின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | அழிக்கப்பட்ட பொருட்களின் விவரம், அளவு, அழிக்கப்பட்ட தேதி மற்றும் இடம், மேலும் நிகழ்வில் கலந்து கொண்ட அலுவலர்கள் மற்றும் சாட்சிகளின் பெயர்கள் மற்றும் கையொப்பங்களுடன் முறையான அழிப்பு மகஜர் / பஞ்சநாமா தயாரிக்கப்பட வேண்டும்.<br><br>அழிப்பு நடவடிக்கை முடிவடைந்த பின்னர், அதற்கான அழிப்பு அறிக்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய மகஜர் / பஞ்சநாமா ஆகியவை இவ்வழக்கின் கோப்பில் பதிவு செய்யும் பொருட்டு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும்.<br><br>இவ்வுத்தரவின் சான்று நகலை உரிய அலுவலருக்கு அனுப்பி, அதன்படி நடவடிக்கை மேற்கொண்டு இணக்க அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட TN 48 AJ 8255 என்ற பதிவெண் கொண்ட HERO SPLENDER PLUS இருசக்கர வாகனத்தை மனுதாரர் CRLMP.NO:3509/2025 என்ற மனு அனுமதிக்கப்பட்ட பேரில் மனுதாரர் இருசக்கர வாகனத்தை இடைக்காலமாக பெற்று சென்றுள்ளார். மனுதாரரின் இடைக்கால பொறுப்பில் இருப்பதை நிரந்தரமாக வைத்து கொள்ள உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட HMD KEYPAD செல்போனை அதன் உரிமையாளர் உரிய முறையில் மனு செய்து பெற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கானது இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து **20.07.2026** தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், 1வது எதிரி தரப்பில்

கற்றறிந்த வழக்கறிஞர் திரு.E.ரவிசந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், 2 வது எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கிருபானந்த் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பினரும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது குற்றவியல் நீதித்துறை நடுவர், முசிறி நீதிமன்றத்தில் முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.05/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின் மேல்விசாரணைக்காக திருச்சிராப்பள்ளி, முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு, இவ்வழக்காக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்டது.

1. **இவ்வழக்கின் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு : –**

அரசு தரப்பு வழக்கானது, காலை 18.03.2025 ம் தேதி காலை 07.00 மணிக்கு முசிறி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட நாமக்கல் – திருச்சி ரோட்டில் முசிறி பெரியர் பாலம் கீழ்புறம், இவ்வழக்கின் 1 வது எதிரி வேல்முருகன் TN 48 AJ 8255 என்ற பதிவெண் கொண்ட Hero Splender Plus இருசக்கர வாகனத்தில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட மனிதனின் மனதினை மதி மயக்கம் செய்தும், உடலுக்கு ஊருவிளைவிக்கும் என்றும், இதனால் பொதுமக்களின் எதிர்காலம் பாதிக்ககூடும் என்றும் தெரிந்தே புகையிலை சார்ந்த பொருட்களை ஹான்ஸ் 40 கிகி ஐ 2 வது எதிரி கிஷோர் என்பவரிடம் இருந்து வாங்கி விற்பனை செய்வதற்காக வைத்திருந்துள்ளார். எனவே எதிரிகளின் மீது சட்ட பிரிவுகள் 275, 123 of BNS, 6, 24(1) of COTPA act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்த வழக்கானது முதலில் வழக்கு கோப்பானது முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.05/2026 ஆக குற்றவியல் நீதித்துறை நடுவர் முசிறி நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்டு, எதிரி நீதிமன்றத்தில்

முன்னிலையானதும், எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்களின் நகல் யாவும் கு.வி.மு.ச.207 ன்படி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வழக்கானது எதிரி மீது சட்டப்பிரிவுகள் 275, 123 of BNS, 6, 24(1) of COTPA act–ன் கீழான குற்றச்சாட்டு என்பதால், வழக்கு கோப்பினை மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு மேல் விசாரணைக்காக அனுப்பப்பட்டது. மேலும், இந்த வழக்கு கோப்பானது மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் அமர்வு வழக்கு எண்.222/2026 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, பின்னர் இவ்வழக்கானது இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது.

3. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரான பின்னர் BNSS பிரிவு 249 ன் கீழ் அரசு தரப்பில் வழக்கு சங்கதிகள் குறித்து அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த வழக்கை திறந்து வைத்தார். இரு தரப்பும் கேட்கப்பட்டு, இந்த வழக்கில் எதிரிகக்கு எதிராக தகுந்த முகாந்திரம் இருப்பதால் BNSS பிரிவு 250 உ/இ பிரிவு 251 ன் படி எதிரி மீது சட்டப்பிரிவுகள் 275, 123 of BNS Act r/w Section 24(1) of COTPA Act–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது.

4. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையான பின் எதிரிகளிடம் அரசு தரப்பு, குற்றம் பற்றி விளக்கி கேட்டபோது குற்றத்தை மறுத்தரைத்தார்கள். எனவே இவ்வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

5. அரசு தரப்பில் தனது வழக்கினை மெய்பிக்க வேண்டி **அ.சா.1 முதல் அ.சா.6** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், **அ.த.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.5** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சான்றாவணங்கள் எதையும் குறியீடு செய்யப்படவில்லை.

**6. அரசுத்தரப்பு சாட்சியத்திலிருந்து புலப்படும் வழக்கின் சுருக்கம்:**

6.1) அ.சா.1 தீபன்ராஜ், முதல் நிலை காவலர் தனது சாட்சியத்தில் நான் கடந்த 2025–ம் ஆண்டு முசிறி காவல் நிலையத்தில் பணிபுரிந்த போது 18.03.2025 அன்று காலை 07.00 மணி அளவில் 1–வது எதிரி வேல் முருகன் வைத்திருந்த ஸ்பெலண்டர் வாகனத்தில் புகையிலை சம்பந்தப்பட்ட ஹான்ஸ் 40 கிலோவை 2–வது எதிரியிடம் வாங்கி விற்பனை செய்வதற்காக வைத்திருந்ததை நாமக்கல்–திருச்சி ரோட்டில் உள்ள பெரியார் பாலத்துக்கு அருகில் ஆய்வாளர் கைது செய்து கைப்பற்றி நிலையம் வந்து வழக்கு பதிவு செய்வதற்கு உதவியாக இருந்தேன். என்னை ஆய்வாளர் விசாரித்தார் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.2) அ.சா.2 பாரதிராஜா, முதல் நிலை காவலர் தனது சாட்சியத்தில் நான் கடந்த 2025–ம் ஆண்டு முசிறி காவல் நிலையத்தில் பணிபுரிந்த போது 18.03.2025 அன்று காலை 07.00 மணி அளவில் 1–வது எதிரி வேல் முருகன் வைத்திருந்த ஸ்பெலண்டர் வாகனத்தில் புகையிலை சம்பந்தப்பட்ட ஹான்ஸ் 40 கிலோவை 2–வது எதிரியிடம் வாங்கி விற்பனை செய்வதற்காக வைத்திருந்ததை நாமக்கல்–திருச்சி ரோட்டில் உள்ள பெரியார் பாலத்துக்கு அருகில் ஆய்வாளர் கைது செய்து கைப்பற்றி நிலையம் வந்து வழக்கு பதிவு செய்வதற்கு உதவியாக இருந்தேன். என்னை ஆய்வாளர் விசாரித்தார் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.3) அ.சா.3 சரவணன், முதல் நிலை காவலர் தனது சாட்சியத்தில் நான் கடந்த 2025–ம் ஆண்டு முசிறி காவல் நிலையத்தில் பணிபுரிந்த போது 18.03.2025 அன்று காலை 07.00 மணி அளவில் 1–வது எதிரி வேல் முருகன் வைத்திருந்த ஸ்பெலண்டர் வாகனத்தில் புகையிலை சம்பந்தப்பட்ட ஹான்ஸ் 40 கிலோவை 2–வது எதிரியிடம் வாங்கி விற்பனை செய்வதற்காக வைத்திருந்ததை நாமக்கல்–திருச்சி ரோட்டில் உள்ள பெரியார் பாலத்துக்கு அருகில் ஆய்வாளர் கைது செய்து கைப்பற்றி நிலையம் வந்து வழக்கு பதிவு செய்வதற்கு உதவியாக இருந்தேன். என்னை ஆய்வாளர் விசாரித்தார் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.4) அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோர் தங்களது சாட்சியத்தில் நாங்கள் முசிறி மலையப்பநகரில் குடியிருந்து வருகிறேன். போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க நான் கையெழுத்து செய்தோம். போலீசார் எங்களை விசாரித்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளனர்.

6.5) அ.சா.6 செல்லதுரை, காவல் ஆய்வாளர் தனது சாட்சியத்தில் நான் தற்பொழுது முசிறி காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.03.2025 ம் தேதி காலை 07.00 மணியளவில் நாமக்கல்–திருச்சி ரோட்டில் முசிறி பெரியார் பாலம் பகுதியில் போலீஸ் பார்ட்டியுடன் ரோந்து பணியில் இருந்த பொழுது TN 48 AJ 8255 என்ற ஹீரோ ஹோண்டா இரு சக்கர வாகனத்தை சோதனையிட்டு பார்த்த பொழுது 1 வது எதிரி உடலுக்கு தீங்கு விளைவிக்க கூடிய 40 கிலோ ஹான்ஸ் பாக்கெட்டுகளை 2 வது எதிரியிடம் இருந்து பெற்று விற்பனைக்காக வைத்திருந்ததை கண்டுபிடித்து அவரை கைது செய்து அந்த பாக்குகளை மகஜர் மூலம் கைப்பற்றினேன். ஹான்ஸ் புகையிலை நீதிமன்றத்தில் ஒப்படைத்து நீதிமன்ற உத்தரவு மூலம் அழிக்கப்பட்டது. ஹான்ஸ் புகையிலை கைப்பற்றியதற்கான மகஜர் அ.த.சா.ஆ.1 ஆகும்.

மேலும் 1 வது எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு பரிந்துரைத்தேன். நிலையத்தில் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை குற்ற எண்.80/2025 படி பிஎன்எஸ் பிரிவுகள் 275, 123 மற்றும் சட்டப்பிரிவு 6, 24(1)ன் கீழ் COTPA சட்டப்படி பதிவு செய்த அறிக்கை அ.த.சா.ஆ.2 ஆகும். சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவ இடத்தில் தயார் செய்த பார்வை மகஜர் அ.த.சா.ஆ.3 வரைபடம் அ.த.சா.ஆ.4 ஆகும். எதிரியிடம் கைப்பற்றிய வாகனம் மற்றும் செல்போனிற்கான புகைப்படம் அ.த.சா.ஆ.5 ஆகும். பின்பு சாட்சிகளை விசாரித்து புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். இந்த வழக்கில் 2 வது எதிரி முன்பினை

பெற்றுவிட்டார் என சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்து கொள்ளப்பட்டது.

7) அரசு தரப்பு சாட்சியத்தில் எதிரிகளுக்கு பாதகமாக தோன்றியவற்றை குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி வினவியபோது அவற்றை பொய் எனக்கூறி மறுத்தார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சி யாரும் விசாரிக்கப்படவில்லை.

8) இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் எதிரிகஙள மீதான குற்றசாட்டு எல்லாவித நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா? என்பதுதான்.

9) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

**<u>தீர்வு:-</u>**

இந்த வழக்கில் அரசு தரப்பு மொத்தம் 6 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளது. அ.சா.6 இந்த வழக்கில் 18.03.2025 எதிரிகளை சோதனை செய்து 40 கிலோ ஹான்ஸ் பாக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார். இந்த வழக்கில் முக்கியமான தீர்மானிக்கப்பட வேண்டியது கைப்பற்றப்பட்ட புகையிலை பொருட்கள் மனித உடலுக்கு தீங்கு விளைவிக்க கூடியதா இல்லையா என்பதே ஆகும். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட பொருட்கள் தடய ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு TRI/PRO-MISC/01/2023 அறிக்கை பெறப்பட்டுள்ளது. அதில் கைப்பற்றப்பட்ட பொருட்களில் Nicotine and Arecoline ஆகியவை இருந்ததாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவைகள் அரசால் தடை செய்யப்பட்டவை என்பது உண்மை.

அரசால் தடை செய்யப்பட்டவை என்றாலும் அதை உபயோகிக்க கூடாது என்று எந்த சாட்சியமும் சான்றாவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. இந்த வழக்கில் புலன் விசாரணை அதிகாரி கைப்பற்றப்பட்ட பொருட்களால் யாரும்

பாதிக்கப்பட்டார்களா என்பது பற்றி எந்த சாட்சியமும் முன்னிலைப்படுத்தவில்லை. கைப்பற்றப்பட்ட பொருட்களை ஆராயும் பொழுது அந்த பொருட்கள் முறையாக அனுமதி பெறப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. அந்த பொருட்களை தயாரித்த நிறுவனங்கள் பற்றி எந்த புலன் விசாரணையும் செய்யப்படவில்லை.

**முடிவாக,** இந்த வழக்கில் சட்டப்பிரிவு 123 BNS ன் கீழ் நிரூபிக்க எந்தவித நிலையான சாட்சியங்கள் எதுவும் இல்லை. ஆனால் இந்த வழக்கில் புகையிலை பொருட்களை கைப்பற்றிய சங்கதி நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த வழக்கில் 1, 2 எதிரிகளுக்கு எதிராக அரசு தரப்பு 6 உ/இ 24(1) COTPA Act ன் கீழ் குற்றத்தை நிரூபித்து விட்டது என முடிவு செய்து எதிரிகளை 258(2) BNSS ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து எதிரிகளுக்கு மேற்படி பிரிவின் கீழ் ரூ.200/– வீதம் அபராதம் விதிக்கப்படுகிறது. எதிரிகள் அபராதம் கட்ட தவறும் பட்சத்தில் பிரிவு 8 BNSS ன் கீழ் ஒரு வாரம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்து உத்தரவிடுகிறன்.

இவ்வழக்கு இறுதியாக முடிவுற்றுள்ளதாலும், பொருள் சாட்சியாக நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்ட 40 கிலோ ஹான்ஸ் பாக்கெட்டுகள் சட்டப்பூர்வமான எந்தவித பயன்பாட்டிற்கும் உகந்ததாக இல்லாததுடன், அவற்றை மீள ஒப்படைப்பதற்கோ அல்லது பொதுமக்கள் பயன்பாட்டிற்காக விநியோகிப்பதற்கோ தகுதியற்றவையாக இருக்கலாம்.

எனவே, பறிமுதல் செய்யப்பட்ட மேற்கண்ட 40 கிலோ ஹான்ஸ் பாக்கெட்டுகள் அரசுக்கு பறிமுதல் செய்யப்பட்டதாகக் கருதப்பட்டு, அவற்றின் பாதுகாப்புப் பொறுப்பில் உள்ள பிரிவு 38(4) Food Safety and Standard Act, 2006 அலுவலரால் சட்டத்தின்படி அழிக்கப்பட வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

மேலும், அவ்வாறு அழிக்கும் நடவடிக்கை பொறுப்புள்ள அலுவலர்/குழுவின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட வேண்டும். அழிக்கப்பட்ட பொருட்களின் விவரம், அளவு, அழிக்கப்பட்ட தேதி மற்றும் இடம், மேலும் நிகழ்வில் கலந்து கொண்ட அலுவலர்கள் மற்றும் சாட்சிகளின் பெயர்கள் மற்றும்

கையொப்பங்களுடன் முறையான அழிப்பு மகஜர் / பஞ்சநாமா தயாரிக்கப்பட வேண்டும்.

அழிப்பு நடவடிக்கை முடிவடைந்த பின்னர், அதற்கான அழிப்பு அறிக்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய மகஜர் / பஞ்சநாமா ஆகியவை இவ்வழக்கின் கோப்பில் பதிவு செய்யும் பொருட்டு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

இவ்வுத்தரவின் சான்று நகலை உரிய அலுவலருக்கு அனுப்பி, அதன்படி நடவடிக்கை மேற்கொண்டு இணக்க அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட TN 48 AJ 8255 என்ற பதிவெண் கொண்ட HERO SPLENDER PLUS இருசக்கர வாகனத்தை மனுதாரர் CRLMP.NO:3509/2025 என்ற மனு அனுமதிக்கப்பட்ட பேரில் மனுதாரர் இருசக்கர வாகனத்தை இடைக்காலமாக பெற்று சென்றுள்ளார். மனுதாரரின் இடைக்கால பொறுப்பில் இருப்பதை நிரந்தரமாக வைத்து கொள்ள உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட HMD KEYPAD செல்போனை அதன் உரிமையாளர் உரிய முறையில் மனு செய்து பெற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் நேரிடையாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு மீண்டும் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு பின்னர் **2026-ம் வருடம் ஜூலை மாதம் 20**-ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி
தேதி : 20.07.2026

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:-</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | தீபன்ராஜ், முதல் நிலை காவலர் |
| அ.சா.2 | பாரதிராஜா, முதல் நிலை காவலர் |
| அ.சா.3 | சரவணன், முதல் நிலை காவலர் |
| அ.சா.4 | தனசேகர் |
| அ.சா.5 | முருகானந்தம் |
| அ.சா.6 | செல்லதுரை, காவல் ஆய்வாளர் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | - | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.த.சா.ஆ.2 | - | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.3 | - | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.4 | - | வரைபடம் |
| அ.த.சா.ஆ.5 | - | கைப்பற்றிய வாகனம், செல்போன் ஆகியவற்றிற்கான போட்டோ |

**<u>சான்று பொருட்கள்</u>** :- 40 கிலோ ஹான்ஸ் பாக்கெட்டு, TN 48 AJ 8255 என்ற பதிவெண் கொண்ட HERO SPLENDER PLUS இருசக்கர வாகனம், HMD KEYPAD செல்போன்.

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை

GOPINATHAN S
Digitally signed by GOPINATHAN S

இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.
தேதி : 20.07.2026